1973 நவம்பர் 20]

திருவில்லிபுத்தூருக்கு துணை நீதி மன்றம்.

*222 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் ஏற்படுத்த அரசு ஆலோசித்து வருகின்றதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர் திருவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: அதன் பணிகள் எப்போது துவங்கப் படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்க உத்தரவு போட்டவுடன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஸ்ரீவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் அமைப்பது சம்பந்தமாக ஹைகோர்ட்டில் இருந்து விசேஷ பரிந்துரை ஏதாவது வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உயர்நீதிமன்றம் அப்படிப் பட்ட சிபார்சு ஒன்றை செய்தது. நாம் அதை இந்தக் குழு பரிசீலிக்க வேண்டுமென்று அனுப்பித்தோம். குழு பரிசீலனை செய்து இப்போது முடிவை அனுப்பியிருக்கிறது. அதை நாம் மறுபரிசீலனை செய்ததற்குப் பின்னுல் எல்லா நீதிமன்றங்கள் பற்றியும் முடிவு எடுக்கும்போது முன் உரிமை கொடுத்து எடுக்க முடியுமா என்பது பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தக் குழுவின் தலைவராக இருந்தவர் இப்போது ஹைகோர்ட் நீதிபதியாகி விட்டார். ஆகவே இந்தக் குழுவின் சிபார்சு எப்போது அமுலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுதான் விளக்கம் சொன்னேன். ஏராளமான சிபார்சுகள் இருப்பதால் ஒட்டு மொத்தமாக எடுத்தால் நிதிப்பிரச்னை வருகிறது. ஆகவே முன் உரிமை கொடுத்து, மக்களுக்கு நன்மை செய்யத்தக்க அளவில்

எது எதை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்ற பரிசீலனை நடைபெற்று வருகிறது. நிதிநிலைக்கேற்றவாறு பரிசீலனை செய்து ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம்

* 223—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்
திரு. என். கிட்டப்பா மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்தேச புதுக்கோட்டை மாவட்ட அமைப்பில் கரூர் வட்டம், அரவக்குறிச்சி பகுதிகள் ஏதும் இணைக்கப்படுவதற்கான உத்தேசம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. வா. மை அப்துல் ஜப்பார் : இந்த உத்தேச புதுக்கோட்டை மாவட்டம் இப்போது இருப்பதைப் போல் தர்மபுரி, ராமநாதபுரம் மாவட்டங்களைப் போன்று பிற்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசிடமிருந்து ஏதாவது விசேஷ சலுகைகள் பெற அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போதே சில பகுதிகள் பிற்பட்ட பகுதிகளாக கருதப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என் கிட்டப்பா : புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய துவக்கம் வருகிற தமிழர் திருநாளாகிய பொங்கல் நாள் அன்று துவங்கப்பட இருப்பதாக அரசு அறிவித்துள்ளதாக அறிகிறேன். துவங்கப்பட இருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்தில் பக்கத்தில் உள்ள எந்தெந்த மாவட்டங்களில் இருந்து எந்தெந்தப் பகுதிகள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருந்து எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்பட இருக்கின்றன என்பதையும் அறந்தாங்கிப் பகுதி அதில் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கிறதா என்பதையும் அறிவிக்க இயலுமா ?